**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**28 ஆகஸ்ட் 2015 / 13 துல்கஃதா 1436**

# <u>நமது வாழ்வில் இறையச்சத்தின் கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகளைப் பின்பற்றுதல்</u>

اَلْحَمْدُ للهِ رَبِّ الْعَالَمِيْنَ، اَلَّذِيْ بَعَثَ مُحَمَّدًا بَشِيْرًا وَنَذِيْرًا
وَدَاعِيًا إِلَى اللهِ وَسِرَاجًا مُنِيْرًا. أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ
شَرِيْكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ. اَللَّهُمَّ صَلِّ
وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ وَالتَّابِعِيْنَ، صَلاَةً
وَسَلاَمًا دَائِمَيْنِ مُتَلاَزِمَيْنِ إِلَى يَوْمِ الدِّيْنِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ،
اِتَّقُوْا اللهَ، أُوْصِيْ وَنَفْسِيْ وَإِيَّاكُمْ بِتَقْوَى اللهِ فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

இறையருள் மிக்க இவ்வெள்ளிக்கிழமை தினத்தில், நாம் எங்கிருந்தாலும் எந்த சூழ்நிலைகளில் இருந்தாலும் நம்மால் முடிந்தளவு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது ”தக்வா” எனும் பக்தியை சிறப்பாக அடைந்து கொள்ள நாம் அனைவரும் இணைந்து முயல்வோமாக! நாம் செய்யும் அனைத்து செயல்களையும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதையும்,

நமது உள்ளங்களில் நாம் இரகசியமாகப் பேசிக் கொள்வதை அவன் நன்கு அறிகின்றான் என்பதையும் நமக்கு நாம் நினைவுபடுத்திக் கொள்வோமாக! இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஒருமுறை கூறினார்கள்:

“நீங்கள் எங்கிருந்தாலும் இறை பயபக்தியை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்! நற்காரியங்களின் மூலம் உங்களின் பாவங்களுக்கு பரிகாரம் தேடிக் கொள்ளுங்கள். மற்றவர்களுடன் பழகும் போது நற்பண்புகளுடன் பழகுங்கள்” (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்)

எனது சகோதரர்களே!

எந்த பயபக்தி அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவைப் பற்றிய உணர்வைத் தொடர்ந்து ஏற்படுத்துமோ, எந்த பயபக்தி அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் புனிதக் கட்டளையை நாம் மீற நினைக்கும் போது நமக்கு வெட்கத்தை ஏற்படுத்தி, அதிலிருந்து நம்மைத் தவிர்க்குமோ அப்படிப்பட்ட பயபக்தியை (தக்வா) அடைய நாம் முயற்சிக்க வேண்டும். மற்றவர்களுக்கு முன்பாக நாம் இருக்கும் போது மட்டும் வெளிப்பட்டு, நாம் தனிமையில் இருக்கும் போது மறைந்து விடும் பயபக்தியை நாம் அடைய முயற்சிக்கக் கூடாது. நம்மை நன்மைகளைச் செய்யத் தூண்டுகின்ற, நீதமாக ஆக்குகின்ற, நாம் எங்கிருந்தாலும் சாந்தி, சமாதானத்தைப் பரப்புபவர்களாக நம்மை ஆக்குகின்ற பயபக்தியை நாம் அடைய முயற்சிக்க வேண்டும். இது சம்பந்தமாக அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”அந்-நஹ்ல்” எனும் அத்தியாயத்தின் 97-வது வசனத்தில் கூறுகின்றான்:

مَنْ عَمِلَ صَٰلِحًا مِّن ذَكَرٍ أَوْ أُنثَىٰ وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهُۥ
حَيَوٰةً طَيِّبَةً ۖ وَلَنَجْزِيَنَّهُمْ أَجْرَهُم بِأَحْسَنِ مَا كَانُوا۟
يَعْمَلُونَ ٩٧

பொருள்: ஆணாயினும் பெண்ணாயினும் எவர் இறைநம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில் நற்செயல் புரிகின்றாரோ அவரை (இவ்வுலகில்) தூய வாழ்வு வாழச் செய்வோம். (மறுமையிலும்) அத்தகையோர்க்கு அவர்களின் உன்னதமான செயல்களுக்கு ஏற்ப நாம் கூலி வழங்குவோம்.

இதே கருத்து இறைத்தூதர்(ஸல்) அவர்களின் மேற்கண்ட ஹதீதிலும் காணப்படுகிறது. அதாவது, இறை பயபக்தி என்பது ஒரு குறிப்பிட்ட இடம் அல்லது நேரத்தோடு மட்டும் தொடர்புடையதல்ல; அது நமது உயிரோட்டத்துடன் கலந்து ஓடுவதாகும். எந்நிலையிலும் நம்மை விட்டும் அதனைப் பிரிக்க முடியாது.

இதுதான் உண்மை என்றிருக்க, நம்மில் சிலர், ”கிலா:ஃபத்” ஆட்சியின் கீழ் அல்லது இஸ்லாமிய அரசாங்கத்தின் கீழ் நாம் இல்லையெனில், உண்மையான முஸ்லிம்களாக, பரிபூரணமான இறை நம்பிக்கையாளர் களாக, பயபக்தியாளர்களாக நாம் ஆக முடியாது என நம்மைப் பயமுறுத்துகின்றனர். மேலும், நாம் ”ஜிஹாத்” (போர்) செய்யவில்லையெனில், ஆயுதங்களைத் தூக்கவில்லையெனில், இறுதியில்

இஸ்லாமிய அரசாங்கத்தை அமைக்கவில்லையெனில் நாம் காஃபிர்களாக (இறை நம்பிக்கையற்றவர்களாக) ஆகி விடுவோம் எனவும் வாதிடுகின்றனர். இதை விட மோசம் என்னவெனில், நாம் "கிலாஃபத்" ஆட்சியின் கீழ் அல்லது இஸ்லாமிய அரசாங்கத்தின் கீழ் வாழ வேண்டுமென்ற விருப்பமில்லாதவர்களாக இருந்தாலும் நாம் "காஃபிர்" ஆகி விடுவோம் எனவும் வாதிடுகின்றனர்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

கடந்த வாரப் பிரசங்கத்தில் நாம் விளக்கியது போல், இஸ்லாத்தின் சில குறிப்பிட்ட கருத்துக்களை நம்மில் ஒவ்வொருவரும் புரிந்து கொண்டுள்ள விஷயத்தில் சரியான கருத்தை நாம் அடைவதற்கு, முறையான விசாரணைகளும், ஆழமாக சிந்தித்தலும் அவசியமாகும். இஸ்லாத்தின் அக்குறிப்பிட்ட கருத்துக்களின் பின்னணிகள் யாவை, அவற்றின் வரலாறு என்ன, அக்கருத்துக்களின் சமூக மற்றும் அரசியல் அம்சங்கள் யாவை என்பவற்றையெல்லாம் அலசி ஆராயக் கடமைப்பட்டுள்ளோம். ஒரு சிக்கலான கருத்தை, அது காணப்பட்ட எதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளாமல், அது ஏற்படுத்தப்பட்டதற்கான நோக்கங்களைப் புரிந்து கொள்ளாமலும் குருட்டுத்தனமாக ஏற்றுக் கொள்வதானது தவறானதாகவும், ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் ஆகி விடும். அதுவும் "கிலாஃபத்" அல்லது "இஸ்லாமிய அரசாங்கம்" போன்ற கருத்துக்களைப் பரப்புவதில் கடுமையாக இருப்பதும், தீவிரவாதப் போக்குடைய வகுப்பாரால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட கருத்தை அடிப்படையாகக் கொண்டு அவற்றை அரங்கேற்ற முயல்வதும் நிலைமையை மேற்கொண்டு மோசமாக்கி விடும்.

எனது சகோதரர்களே!

இஸ்லாம், மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்களுக்கும் வழிகாட்டுகிறது என்பதை பொதுவாக அனைத்து முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ளும் நிலையில், இஸ்லாமிய அரசாங்கத்தை ஏற்படுத்துவது முக்கியமான விஷயமா, அவசரத் தேவையா என்பதில் தற்கால இஸ்லாமிய அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். தற்கால சூழ்நிலையில், இஸ்லாமிய அரசாங்கத்தை நிறுவுவதைப் பற்றி விவாதிப்பதில் கூட எவ்வித நன்மையில்லை எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் மரணத்துக்குப் பின்பு அவர்களின் தோழர்களாகிய ஸஹாபாக்கள் "கிலா:ஃபத்" ஆட்சியை நிறுவியது உண்மை தான் என்றிருந்தாலும், அவ்விதமாக நிறுவும் விஷயத்தில் அத்தோழர்களை வருங்கால முஸ்லிம்கள் கண்மூடித்தனமாகக் காப்பியடிக்கக் கூடாது என மார்க்க அறிஞர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். ஷரீஅத்துடைய நோக்கங்களை அடைவதற்காக, இஸ்லாமிய வரலாறு முழுவதும் கிலா:ஃபத்தின் அம்சங்களில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன.

அருள்மிக்க சகோதரர்களே!

ஒரு சமூகம் அல்லது நாடு தனக்கு "கிலா:ஃபத்" அல்லது "இஸ்லாமிய அரசாங்கம்" எனப் பெயரிட்டுக் கொண்டு விட்டதனால் மட்டும் அது இஸ்லாமிய மயமானதாக, இஸ்லாமியத் தன்மை கொண்டதாக ஆகி விடாது. குறிப்பாக, அந்நாட்டில் அநீதம், ஒடுக்குமுறை, லஞ்சம்,

பின்னடைவு, திறமையற்ற நிலை போன்றவை காணப்படும் போது அது இஸ்லாமிய மயமான நாடாக எப்படி ஆக முடியும்? மறுபுறம், எந்த நாடு அல்லது சமூகம், குர்ஆன் மற்றும் "சுன்னாஹ்" எனும் நபி(ஸல்) அவர்களின் வழிமுறையில் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம் சர்வதேச மதிப்பீடுகளையும், கொள்கைகளையும் பின்பற்றுகிறதோ அவையே இஸ்லாமிய மயமான நாடாக, சமூகமாக இருக்க முடியும். நீதம், சமத்துவம், ஆலோசித்து நிர்வகித்தல் (அரபி மொழியில் "ஷூரா"), நல்லெண்ணக் கலாச்சாரம், நிர்வாகத் திறமை, கல்வியைத் தேடுதல் போன்ற நல்ல விஷயங்களுக்காக முயற்சித்தல் ஆகியவை அந்த சர்வதேச மதிப்பீடுகளாகும்.

எனவே, இஸ்லாமியக் கொள்கைகளையும் மதிப்பீடுகளையும் தனது அன்றாட வாழ்வில் ஏற்படுத்திக் கொள்வது தான் ஒவ்வொரு முஸ்லிமுடைய கடமையாகும். எனது சகோதரர்களே! நம்மிலும் நமது குடும்பத்தாரிலும் நமது சமூகத்திலும் இஸ்லாத்தை வளர்த்துக் கொள்வோமாக! நாம் எங்கிருந்தாலும், நன்மைகளைச் செய்வதற்கும், மதிப்பீடுகளைப் பரப்புவதற்கும் நம்மைத் தூண்டுகின்ற இறை பயபக்தியோடு (தக்வா) நாம் வாழ வேண்டும் என இஸ்லாம் நமக்குப் போதித்துள்ளது. எஞ்சியுள்ள நாட்களில் மற்றவர்களுக்குப் பயனுள்ளவர்களாக அமைவோமாக! நம்மில் எவ்விஷயம் நல்லதாக உள்ளதோ அதையே நாடுவோமாக! மற்றவர்களிடம் ஆக்கப்பூர்வமான உணர்வை ஏற்படுத்தி, நம்மையும் நமது சமுதாயத்தையும் முன்னேற்றிக் கொள்வோமாக! ஒருமுறை இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்:

خَيْرُ النَّاسِ أَنْفَعُهُمْ لِلنَّاسِ

பொருள்: ”மக்களில் சிறந்தவர், மற்ற மக்களுக்குப் பயனுள்ளவராக இருப்பவரே” (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் தப்ரானீ ரஹ்)

பொருளாதார உதவி செய்தல், கல்வியைப் பகிர்ந்து கொள்வது, தொண்டூழியம் செய்தல் போன்ற எவ்வகையிலும் நாம் மற்றவர்களுக்குப் பயனுள்ளவர்களாக அமையலாம். இவையெல்லாம், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அருள்களை நாடிச் செய்யப்பட வேண்டும். எனினும், இவற்றை, நமது இறை பயபக்தியால் நாம் வழிகாட்டப்பட்டு, முதலில் செய்பவர்களாக நாம் இருக்க வேண்டும். நாம் இதற்கு முன்பு கூறிய ”இஸ்லாமிய அரசாங்கம்” போன்ற வரலாற்று அம்சங்கள் முற்கால தலைமுறையினரிடம் காணப்பட்ட பரிசுத்தமான இஸ்லாமியப் பண்புகளைப் பிரதிபலிப்பவையாக இருக்க வேண்டும். அப்பண்புகளை நாம் ஆர்வத்துடன் பின்பற்ற வேண்டும். வெறும் வரலாற்று அம்சங்களை மட்டும் முன்னிலைப்படுத்தக் கூடாது. இறை பக்தியும், நற்பண்பும் மனித வாழ்க்கையின் உடல் சம்பந்தமான அம்சங்கள் மிகைத்து, இஸ்லாம் மேலோட்டமாக காணப்படும் போது மட்டும் வெளிப்படுவதில் பொருள் இல்லை.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மனைவருக்கும் நேர்வழி காட்டுவானாக! நம்மால் முடிந்த அளவு சிறந்த இறை பயபக்தியாளர்களாக நாம் ஆகுவதற்கு நமக்கு அருள் புரிவானாக! நிச்சயமாக, அவனே நேர்வழி காட்டுபவன்; மிக்க கிருபையாளன். ஆமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.